இணைப்பு I

(83 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

12–2–2024 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த ஆண்டிற்கான முதல் கூட்டத் தொடரின் தொடக்கமாக சட்டமன்றப் பேரவை மரபுகளின்படி மாண்புமிகு ஆளுநர் அவர்களின் உரை நிகழ்ந்துள்ளது. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது உரையினை வாசித்த பின்னர், பேரவைத் தலைவராகிய தாங்களும் அரசு தயாரித்த உரையின் தமிழாக்கத்தினை அவையில் வாசித்தீர்கள். இது தொடர்பாக சட்டப் பேரவை விதி 17–ஐத் தளர்த்தி, பின்வரும் தீர்மானத்தினை இப்பேரவையில் முன்மொழிகின்றேன்:*

தீர்மானம்

“2024 ஆம் ஆண்டுக்கான இந்த முதல் கூட்டத்தொடரில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆளுநர் உரை இந்த மாண்புமிகு மன்றத்திற்கு வழங்கப்பட்டபடியே அவைக்குறிப்பில் பதிவேற்றம் செய்திட வேண்டும்” என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. *(ஆம்)*

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆளுநர் உரையின் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சிடப்பட்ட பகுதிகள் மட்டுமே அவைக்குறிப்பில் இடம்பெறும். வேறு எவையும் அவைக்குறிப்பில் இடம்பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.